## மனநிறைவு

மூன்று நபர்கள் ஓரிடத்திற்குச் சென்றுகொண்டிருந்தார்கள், வழியில் அவர் களுக்கு ஒரு பொக்கிஷம் கிடைத்தது, மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். தகுந்த ஒரு இடத்தைத்தேடிச்சென்று அங்கு அமர்ந்து அதனைச் சரிசம மாகப் பகிர்ந்துகொள்வது என்று முடிவு செய்தார்கள். தொடர்ந்துசென்று கொண்டிருந்த நிலையில் ஒரு தகுந்த இடத்திற்குச் சென்றடைந்தார்கள். பிரித்துக் கொள்வதற்கு முன்பு அவர்களுக்குப் பசி எடுத்தது, ஒருவனை அருகிலிருந்த ஒரு குடியிருப்புப் பகுதிக்கு அனுப்பி சாப்பிடுவதற்கு ஏதும் கொண்டுவரும்படி அனுப்பினார்கள், அவனும் சென்றான் சாப்பாடு வாங்கிக்கொண்டான். அவன் மனதில் ஒரு தவறான எண்ணம் வந்தது, ஏன் முழு பொக்கிஷத்தையும் தானே எடுத்துக்கொள்ளக்கூடாது என்று திட்ட மிட்டு சாப்பாட்டில் விஷம் கலந்துவிடுவது என்று முடிவு செய்தான், அவ்வாறே கலந்தும்விட் டான். இங்கேயும் இந்த இருவரும் சேர்ந்து ஒரு திட்டம் தீட்டினர், அவன் சாப்பாடு கொண்டுவந்ததும் உடனே நாம் அவனைக் கொன்றுவிடுவோம், பொக்கிஷத்தைச் சரிசமமாக இருவரும் பிரித்துக்கொள்வோம் என்று. அவனும் வந்தான், இந்த இருவரும் சேர்ந்து அவனைக்கொன்று விட்டனர், பின்பு அந்த விஷம் கலந்த உணவை சாப் பிட்டனர், இருவரும் இறந்துவிட்டனர். பேராசையின் முடிவு இவ்வா றாகத்தான் இருக்கும்.

ஹஜ்த்ரத் ஆயிஷா (ர) அவர்களிடம் பல திராட்சைப்பழக்கூடைகள் அன் பளிப்பாக வந்தன, அவர்கள் அதனை தேவையானவர்களிடையே பகிர்ந் தளித்துவிட்டார்கள். இரவில் அவர்களுடைய பணியாள் ஒரு கூடையை எடுத்துவந்தாள். அவர்கள் கேட்டார்கள் இது எங்கிருந்தது, அவள் கூறி னாள் நான் இதனை பின்பு சாப்பிடலாம் என்று ஒரு கூடையை எடுத்து வைத்திருந்தேன் என்றாள். அவர்கள் கூறினார்கள் சாப்பிடுவதாக இருந் தால் ஒரு குலையை எடுத்துவைத்திருக்கலாமே இவ்வளவு பழங்கள் தேவையில்லையே.

மிகவும் பிரபலமான ஒரு நபித்தோழர் ஹஜ்த்ரத் ஹகீம்பின் ஹிஜ்ஸாம் (ர) அவர்கள் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் வந்து தன்னுடைய தேவையை எடுத்துச் சொன்னார்கள். இறைத்தூதர் ﷺ அவர்கள் அதனைப் பூர்த்தியும் செய்தார்கள். அவர் மீண்டும் இரண்டாவது முறையாக மறுபடியும் வந்தார்கள், இறைத்தூதர் ﷺ அவர்கள் மறுபடியும் அவருக்கு அளித் தார்கள். மூன்றாவது முறையும் இவ்வாறே நடந்தது, இறைத்தூதர் ﷺ அவர்கள் அவரை நெறிப்படுத்தும் வகையில் கூறினார்கள்: ஹகீம் அவர் களே, இந்த செல்வம் ஒரு இனிமையான, கவர்ச்சியான மற்றும் சுவை

www.uzairfalahi.com

யான ஒன்றாகும். யார் இதனை நிறைவான மனதுடன், அதாவது எவ் விதப் பேராசையுமில்லாது பெற்றுக்கொள்வாரோ அது அவருக்குப் பேரருளாக ஆகிவிடும், யார் அதனைத் தாழ்வு மனப்பான்மையுடன் எடுத்துக்கொள்வாரோ அது அவருக்கு பயனளிக்காதுபோகும். அதன் உதாரணம் எப்படியென்றால், உணவு சாப்பிட்டும் திருப்தியடையாதிருப் பது போன்ற நிலை. கொடுக்கும் கை வாங்கிக்கொள்ளும் கையைவிடச் சிறந்தது. (متفق عليه)

ஹஜ்ரத் ஹகீம்பின் ஹிஜ்ஸாம் (ர) அவர்கள் இதனைக் கேட்டவுடன் இனி எதனையும் யாரிடமும் கேட்கமாட்டேன் என்று சபதம் செய்தார்கள். இவ்வகையில், ஹஜ்த்ரத் அபூபக்ர் ஸித்தீஃக் (ர) அவர்கள் காலத்தில் அவ ருக்கு தேவையான எதையும் வந்து பெற்றுக்கொள்ளும்படி அழைப்பு விடுக்கப்பட்டபோது அவர் மறுத்துவிட்டார்கள். இதே நிலை ஹஜ்த்ரத் உமர் பின் க்ஹத்தாப் (ர) அவர்கள் காலத்திலும் ஏற்பட்டது. ஹஜ்த்ரத் உமர் பின் க்ஹத்தாப் (ர) அவர்கள் அவரிடம் ஆள் அனுப்பி வந்து அவருடைய பங்கினைப் பெற்றுக்கொள்ளுமாறு அழைத்தபோது, அவர்கள் தான் ஏற்ற சபதத்தின் அடிப்படையில் உறுதியுடன் இருந்தார்கள், எதையும் பெற்றுக் கொள்ளவில்லை. ஹஜ்த்ரத் ஹகீம்பின் ஹிஜ்ஸாம் (ர) அவர்கள் வாழ் நாள் முழுவதும் மனநிறைவும் திருப்தியும் பெற்றவராகவும் இறைத்தூதர் ﷺ அவர்களுடைய அறிவுரைகளை முடிச்சுப்போட்டு வைத்து வியர்வை சிந்திக் கஷப்பட்டு உழைத்து சம்பாதித்து வாழ்ந்துவந்தார்கள்.

www.uzarfaidhi.com

ஹஜ்த்ரத் சல்மான் ஃபார்சி (ர) அவர்கள் ஆளுநராக இருந்தார்கள், அவர் களுடைய மாத சம்பளம் ஐந்தாயிரம் திர்ஹமாக இருந்தது. அவர் தன்னு டைய சம்பளம் முழுவதையும் தானம் செய்துவிடுவார்கள். தன் வாழ்வா தாரத்திற்காக அவர்கள் பேரீத்த ஓலைகளைக் கொண்டுவந்து அதனைக் கொண்டு பாத்திரங்களைச்செய்து மூன்று திர்ஹம்களுக்கு விற்றுவிடு வார்கள், அதிலிருந்து ஒரு திர்ஹம் தானம் செய்வார்கள், ஒரு திர்ஹமைக் கொண்டு உணவுப்பொருட்களைக் கொண்டுவருவார்கள் மற்றொரு திர் ஹமைக்கொண்டு மீண்டும் பேரீத்த ஓலைகளைக்கொண்டுவந்து அதில் பாத்திரங்களைச்செய்து அடுத்த நாள் விற்பார்கள்.

## மனநிறைவு என்பது என்ன?

மன நிறைவு என்பது அல்லாஹ் தஆலா நமக்கு அளித்துள்ளதைக்கொண்டு திருப்தியடைந்து மனநிறைவுகொள்வதாகும். மற்றவர்களிடத்திலிருக்கும் எந்த பொருள் மீதும் ஆசை கொள்ளக்கூடாது. இதுவே தூய்மையான விசுவாசத்தின் ஆதாரமாகும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

قَدْ أَفْلَحَ مَنْ أَسْلَمَ وَرُزِقَ كَفَافًا وَقَنَّعَهُ اللهُ بما آتاه பொருள்: *இஸ்லாத்தை ஏற்று விசுவாசம் கொண்டவர் மற்றும் தேவைக்கேற்ப வாழ்வாதாரமும் அல்லாஹ் அளித்தவற்றைக்கொண்டு திருப்தியும் மனநிறைவு கொள்ளும் பண்பும் அளிக்கப்பட்டவர் வெற்றியடைந்துவிட்டார் (முஸ்லிம்).*

## இறைத்தூதர் (ஸ) அவர்களின் மனநிறைவு

அல்லாஹ் தஆலா இறைத்தூதர் ﷺ அவர்களுக்கு அளித்திருந்ததைக் கொண்டு அவர்கள் திருப்தியடைந்தவர்களாக இருந்தார்ககள், அவர்கள் எப்போதுமே யாரிடமும் எதையும் கேட்டு கையை நீட்டவில்லை, அவர்களுடைய மனதில் உலக விஷயங்களைப்பற்றிய ஆசையும் ஏற்பட்டதேயில்லை. அவர்கள் ﷺ ஹஜ்த்ரத் க்ஹதீஜா (ர) அவர்களுடைய பொருளைக்கொண்டு வியாபாரம் செய்து இலாபத்தை ஈட்டினார்கள், எனினும் ஒருபோதும் செல்வத்தை நேசித்ததில்லை. போர்ப்பொருட்கள் அவர்களிடம் ஏராளமாக வந்துகொண்டிருக்கும், ஆனால், அதனை முழுவதுமாக நபித்தோழர்களுக்கிடையில் பகிர்ந்தளித்துவிடுவார்கள், தமக்காக எதையும் வைத்துக்கொள்வதில்லை. இறைத்தூதர் ﷺ அவர்கள் பேரீத்தமரக் கீற்றினால் நெய்யப்பட்ட பாய் விரித்துத் தூங்குவார்கள். ஒரு முறை நபித்தோழர்கள் இறைத்தூதர் ﷺ அவர்களுடைய புனித உடலின் மீது இந்தப் பாயினுடைய அடையாளங்கள் பதிந்திருப்பதைக்கண்டு அவர்களுக்காக மிருதுவான ஒரு படுக்கையை ஏற்பாடு செய்யவிரும்பினார்கள், ஆனால், அவர்கள் ﷺ அதனைத் தடுத்துவிட்டுக் கூறினார்கள்:

**مَا لِي وَلِلدُّنْيَا، مَا أَنَا فِي الدُّنْيَا إِلَّا كَرَاكِبٍ اسْتَظَلَّ تَحْتَ شَجَرَةٍ ثُمَّ رَاحَ وَتَرَكَهَا**

பொருள்: *எனக்கு இந்த உலகத்தில் என்ன செய்யவேண்டும், நானோ இந்த உலகத்தில் ஒரு மரத்தின் அடியில் நிழலில் நின்று ஓய்வெடுத்து பின்பு அதனைவிட்டு அங்கிருந்து புறப்பட்டுச்சென்றுவிடும் ஒரு பயணியைத்தவிர வேறில்லை. (திர்மிதி. இப்னு மாஜா)*

மனநிறைவு என்றால் நன்மையான, சிறப்புமிக்க செயல்களிலும் மனநிறைவு கொள்ளவேண்டும் என்று கருதிவிடக்கூடாது, அது தவறாகும். மனநிறைவு கொள்வது என்பது அல்லாஹ் தஆலா ஒருவருக்கு அளிப்பவற்றைப் பற்றியதாகும், அல்லாஹ்வின் திருப்பொருத்தத்திற்காக ஒரு மனிதன் செய்யும் நற்காரியங்களைப்பற்றியதல்ல. அல்லாஹ் தஆலா கூறுகிறான்: **(البقرة: 197)** وَتَزَوَّدُوا۟ فَإِنَّ خَيْرَ ٱلزَّادِ ٱلتَّقْوَىٰ ﴿١٩٧﴾ பொருள்: *மேலும் நீங்கள் (ஹஜ்ஜுக்காக) வழித்துணைச் சாதனங்களைக் கொண்டு செல்லுங்கள்.*(அல் பஃகறா 197). மற்றொரு இடத்தில் கூறப்பட்டுள்ளது:

www.uzairfalahi.com

وَسَارِعُوٓاْ إِلَىٰ مَغۡفِرَةٖ مِّن رَّبِّكُمۡ وَجَنَّةٍ عَرۡضُهَا ٱلسَّمَٰوَٰتُ وَٱلۡأَرۡضُ أُعِدَّتۡ لِلۡمُتَّقِينَ ١٣٣

**(آل عمران: 133)**

பொருள்: *உங்கள் இரட்சகனிடமிருந்து வழங்கப்படும் பாவமன்னிப்பு மற்றும் சுவர்க்கத்தின் பக்கம் விரைந்துசெல்லுங்கள், அது வானங்கள் மற்றும் பூமியின் அளவிற்கு விரிவானது, மேலும், அது இறையச்சமுடையவர்களுக்காக தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது.(அலு இம்ரான் 133).*

## மனநிறைவு கொள்வதின் சிறப்பு

மனநிறைவு கொள்வதை விரும்பும் மனிதனை அல்லாஹ் தஆலா விரும்புகிறான் மற்றும் உலக மக்களும் அவனை நேசிப்பார்கள். இது ஈருலக வாழ்க்கையின் நன்மைகளுக்கான நல்ல ஆதாரமாகும்.

## மனநிறைவு அருட்கொடைகளுக்கான காரணமானதாகும்

இது எப்போதுமே தீராத பொக்கிஷமாகும். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் செல்வத்தைப்பற்றிக் கூறுகிறார்கள்: لَيْسَ الغِنَى عَنْ كَثْرَةِ العَرَضِ، وَلَكِنَّ الغِنَى غِنَى النَّفْسِ
பொருள்: *செல்வசெழிப்பு என்பது உலக உபகரணங்கள் மற்றும் பொருட்களின் மிகுதி அல்ல, உண்மையான செல்வம் என்பது மனநிறைவுதான்.* **(متفق عليه)** பேராசை மற்றும் இச்சைகளின் முடிவு இழிவு மற்றும் அவமானம் மட்டுமே. பேராசை மற்றும் இச்சைகளுக்கு அடிமையானவனுடைய வயிறு எதைக் கொண்டும் நிறைவதில்லை, அவன் எப்போதும் பொருளை அடைவதற்கான வழிகளையே தேடிக்கொண்டிருப்பான். பரக்கத் எனும் அருட்கொடை அவனுடைய இல்லத்திலிருந்து நீக்கப்பட்டு விடுகின்றது. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: وَارْضَ بِمَا قَسَمَ اللَّهُ لَكَ تَكُنْ أَغْنَى النَّاسِ
பொருள்: *அல்லாஹ் உனக்களித்தவற்றைக்கொண்டு திருப்தியடைந்துவிடு நீ யாரிடமும் தேவையற்றவனாக ஆகிவிடுவாய் (திர்மிதி, அஹ்மத்)*

## மனநிறைவு சுவர்க்கத்தின்வழி

*இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: யார் எனக்கு எதையும் எவரிடமும் கேட்கமாட்டேன் என்று உத்திரவாதம் அளிப்பார்களோ அவர்களுக்கு நான் சவர்க்கத்தின் உத்திரவாதமளிப்பேன். நபித்தோழர் த்ஸவ்பான் (ர) அவர்கள் கூறினார்கள், நான், அதன் பின் அவர் எப்போதும் எதையும் யாரிடமும் கேட்டதில்லை (அபூதாவூத், திர்மிதி, அஹ்மத்)*

## மனநிறைவும் திருப்தியும் சுயமரியாதையைப் பாதுகாக்கின்றது

மனநிறைவு கொண்டிருக்கும் ஒரு மனிதர் எந்த வற்புறுத்தலுக்கும் பணிய மாட்டார், மாறாக, எப்போதும் சுதந்திரமாகவே செயல்படுவார். மற்ற

www.uzairfalahi.com

வர்கள் அவரைத் தம்முடைய செல்வாக்கினால் தம்வசப்படுத்திக்கொள்ளவோ அல்லது அவர்மீது தாம் விரும்பிய எதையோ திணிக்கவோ முடியாது. இதற்கு மாறாக, பேராசை எந்நேரமும் ஒருவனை மற்றவர்களைத் திருப்திபடுத்தவும் அவருக்கு அடிமையாவதற்கும் ஆளாக்கிவிடும். ஹஜ்ரத் அலி (ர) அவர்கள் கூறுகிறார்கள், பேராசை நிரந்தரமான அடிமைத்தனமாகும். அடிமைத்தனம் மூன்று விதமானது, முதலாவது, பொதுவான அடிமைத்தனம், இரண்டாவது, இச்சைகளுக்கும் ஆசைகளுக்கும் அடிமையாவது மற்றும் மூன்றாவது, பேராசைகளுக்கே அடிமையாகிவிடுவது.

## மனநிறைவு ஒருவனுடைய மனதில்அமைதியும் திருப்தியும் உருவாக்குகின்றது

மனநிறைவு கொண்டுள்ள ஒருவர் மனக்குழப்பங்களுக்கு அளாவதில்லை. மனநிலை ரீதியாகவே திருப்தியும் மகிழ்ச்சியும் கொண்டவராக இருப்பார். இதற்கு மாறாக, பேராசைகொண்ட ஒருவன் மேலும் மேலும் அடைய வேண்டும் என்ற அலைச்சலுக்கு ஆளாகிவிடுகிறான். அவனுக்கு எந்நேரமும் நிம்மதி கிடைப்பதில்லை. அருள்வாக்கான ஹதீத்ஸ் ஃகுத்சியில் கூறப்பட்டுள்ளது:

يَاابْنَ آدَمَ تَفَرَّغْ لِعِبَادَتِي،أَمْلَأْ صَدْرَكَ غِنًى،وَأَسُدَّ فَقْرَكَ،وَإِنْ لَمْ تَفْعَلْ،مَلَأْتُ صَدْرَكَ شُغْلًا،وَلَمْ أَسُدَّ فَقْرَكَ

*பொருள்: ஆதமுடைய மகனே, நீ என்னை வணங்குவதற்காக உன்னை முழுமையாகத் தயார்படுத்திக்கொள் நான் உன் மனதை எந்தத் தேவையும் இல்லாத மனநிறைவினால் நிரப்பிவிடுவேன் மற்றும் உன்னுடைய ஏழ்மை மற்றும் தேவைகளையெல்லாம் பூர்த்திசெய்துவிடுவேன், அவ்வாறு நீ செய்யவில்லையென்றால் உன் மனதைப் பல்வேறு பிரச்சினைகளால் நிரப்பிவிடுவேன் மற்றும் உன் ஏழ்மையைப்போக்கமாட்டேன்* (இப்னு மாஜா). நிச்சயமாகவே, மனிதனுக்கு என்ன கிடைக்கின்றதோ அதைக்கொண்டு திருப்தியும் மனநிறைவும் கொள்வதில்தான் நிம்மதியும் மகிழ்ச்சியும் உள்ளது, மனிதன் தன் இச்சைகள் அனைத்தும் பூர்த்தியாக வேண்டும் என்று நினைத்தால் ஒரு கவிஞன் கூறுவதுபோன்று இருக்கும்:

ہزاروں خواہشیں ایسی کہ ہر خواہش پہ دم نکلے
بہت نکلے میرے ارمان لیکن پھر بھی کم نکلے

* * *